
# RAILCOACH

APRIL 1971



# நட்பென்னும் சுடர்


E. J. சுந்தர்

(S/o திரு. S. இஃப்ரயிம்)


**ரயில்கோச் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை:**

நண்பர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டனர் ‘‘குமார்! இன்றைக்கு ‘அமுதம்’ இதழ் பார்த்தாயா? இரண்டாயிரம் ரூபாய் பரிசாம். சிறுகதைப் போட்டியொன்று வைத்திருக்கிறார்கள். நீ எங்களுக்காகவாவது அதில் கலந்து கொள்ளவேண்டும்’’ என்றான் முத்துசாமி.

‘‘குமார்! லாட்டரி டிக்கெட்போல இல்லை இது. திறமையப்பா! உனக்கு நல்ல எழுத்துத் திறமையிருக்கிறது. ஏன் அந்த இரண்டாயிரம் உனது கதைக்குக் கிடைக்கக்கூடாது’’—இது தாமோதரன்.

அன்று மாலை தனியாக சைக்கிளில் வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்த நான் நண்பர்களின் பேச்சை நினைவு படுத்திக் கொண்டேன். அவர்கள் பேச்சு என்னை சிந்திக்க வைத்தது. அவர்கள் நினைப்பது போல எனக்குத் திறமையிருப்பது உண்மையா? என்னுள் ஏதோ ஒரு தன்னுணர்வு பொங்கி எழுந்தது. நான் இதில் கலந்து கொள்ளத்தான் போகிறேன். என் உள்ளத்தின் நெடுநாளைய உணர்ச்சிகளைக் கொட்டுகிறேன். என் பேனாவிலே மையையும், உள்ளத்திலே புத்துணர்வையும், எழுச்சியையும் நிரப்பிக்கொண்டு இதோ—வீட்டிற்குச் சென்றவுடன் உட்கார்ந்து விட்டேன். என்னை மறந்து கற்பனை உலகில் கலந்துவிட்டேன்.



E. J. சுந்தர்

* * *

உலகத்தின் துன்பங்களுக்கெல்லாம் முடிவே இருக்காது என்று உணர்த்துவதுபோல மேடு பள்ளமாக கண்ணுக்கெட்டியவரை தெரியும் அந்த கடமுடா சாலையில், கல்லூரியை விட்டு சைக்கிளில் வந்துகொண்டிருந்தேன். அந்த நீண்ட பாதையில் சுடுகாட்டு அமைதி ஒன்றைத் தவிர வேறு துணையில்லை. போதாத தற்கு ஒரு சுடுகாடும் வழியில் இருந்தது. அதைக் கடந்து செல்லும்போதெல்லாம் ஒரு பெரிய தத்துவஞானிபோல எதை எதையோ சிந்தனை செய்து கொண்டு செல்வேன்.

இன்று என் சிந்தனை திடீரென்று தடைபட்டு நிற்கிறது. காரணம், சுடுகாடு பாதையோடு இணையுமிடத்தில் ஒரு மாணவன் பாறையில் உட்கார்ந்து அழுது கொண்டிருக்கிறான். அவனை நான் இதற்கு முன் எங்கேயோ பார்த்திருக்கிறேன். ஆம் அவன் என் கல்லூரியில்தான் படித்துக் கொண்டிருக்கிறான். அவன் அருகிலே என் சைக்கிளை நிறுத்தினேன்—

''என்ன தம்பி! ஏன் இங்கு அழுது கொண்டிருக்கிறாய்?'' ஒரு கல்லூரி மாணவன் அழுது இதுதான் நான் முதல் தடவை பார்க்கிறேன்.

''தம்பி! ஏன் அழுகிறாய் காரணம் சொல்லக் கூடாதா?'' அவன் அழுகையை நிறுத்திவிட்டு ஏக்கத்துடன் என்னைப் பார்த்தான். அந்தப் பார்வையில் உலகத்தின் சோகமெல்லாம் தெரிந்தது.

''சுடுகாட்டில் அழாமல் சிரித்துக்கொண்டா இருப்பார்கள்? என் அக்காவை எரித்துவிட்டு வருகிற துர்பாக்கியசாலி நான். வாழ்க்கையில் இருந்த ஒரே பிடிப்பையும் சாம்பலாக்கிவிட்டு வருகிறேன். இத்தோடு என் வாழ்க்கையும் சாம்பலாகிவிட்டது. இன்னும் எனக்கு என்ன இருக்கிறது, யார் இருக்கிறார்கள்? இனி இதுதான் துணை'' என்றபடி தனது மேல் பையிலிருந்து இரு வெள்ளை மாத்திரைகளை எடுத்தான்.

அவன் கைகளைத் தட்டி விட்டேன். மாத்திரை கருப்பு மண்ணில் விழுந்து புதைந்தது.

''தவறு தம்பி! வாழ்க்கை இந்த மாத்திரையின் அரவணைப்போடு அணையுமானால் ஒரு வேளை நீ துன்பங்களைத் துறந்துவிட்டு மடியலாம். ஆனால் அது ஒரு கோழையின் முடிவு. வாழ்க்கையை நேருக்கு நேர் சந்திக்க வேண்டும். 'செத்தாரை சாவார் சுமக்கும் உலகில்' சாவு ஒரு பெரிய வேதனையாக இருக்க முடியாது. அது தற்காலிகப் பிரிவுதானே. உலகத்தில் மனஉறுதியோடு வாழத்தெரியாத கோழையாகப் பார்த்தாயே'' என்றேன்.

''மிஸ்டர்! நீங்கள் அழகாகத் தத்துவம் பேசுகிறீர்கள். ஏற்கனவே இவற்றைப் பல திரைப்படங்களில் நானும் கேட்டதுதான். புத்தகங்களில் படித்ததுதான். என் நிலையில் இருந்து பார்ப்பவர்களுக்குதான் என் இதயத்தின் கண்ணீர் தெரியும். நானே என்னைப் பலமுறை தேற்றிக்கொண்டு முடியாமல், எல்லை கடந்து வாழ்க்கையின் ஓரத்திற்கே வந்துவிட்டவன். துன்பத்திலே முளைத்து, வேதனையால் பழுத்து, துயரால் துவண்டு போனது என் வாழ்க்கை. தயவு செய்து நான் தனியாகச் சாகிறேன். போய்விடுங்கள்''.

''நீ சாவது சாகிறாய். கொஞ்சம் மெதுவாகச் சாகலாம் வா என்னுடன்'' என்று பலவந்தமாக அவனை என் சைக்கிளின் முன் பகுதியில் ஏற்றி என் அறைக்கு அழைத்து வந்தேன். காப்பி வரவழைத்தேன்; சற்று மறுத்த பின் குடித்தான்.

அவன் கதையை மெதுவாக வரவழைத்தேன். தயக்கத்திற்குப் பிறகே சொல்ல ஆரம்பித்தான். பெரும்பகுதி கண்ணீருடனே கூறினான். நானும் கேட்டு சோகமாகி விட்டேன்.

சுருக்கமாகச் சொல்வதானால் - வழக்கமான ஓர் அனாதையின் கதைதான். கடல் கொஞ்சும் கன்னியாகுமரிக்குப் பக்கத்தில் ஒரு சிற்றூராம். ஈழத்திலே பொருள் ஈட்டி, காலமெல்லாம் துய்க்க, அவன் தந்தை குடும்பத்துடன் கப்பலில் வரும்போது, உலகப்போரில் குண்டு போட்டுவிட்டார்கள். தீக்கிரையான கப்பலிருந்து தப்பியவர்கள் இவனது தாயும், அக்காவும் மட்டுமே. வயிற்றில் சிசுவாக இருந்தவன் தமிழகத்து மண்ணிலே 'ரவி'யாகப் பிறந்தான். இவர்கள் வயிற்றைக் கழுவ மூன்றிடங்களில் பாத்திரம் தேய்த்துவந்த தாயும் சில ஆண்டுகளில் தந்தையைத் தொடர்ந்துவிட்டாள்.

அனாதை மடமொன்றில் இவனையும், இவனுக்குப் பத்து வயது மூத்த அக்காவையும் சேர்த்தார்கள். பொருள் இல்லாவிட்டாலும் இவன் அக்காவிற்கு அறிவு இருந்தது. வகுப்பில் முதல் என்ற காரணந்தால் அரசினர் உதவியோடு அவன் அக்கா கல்லூரியில் இலவசமாகப் படிக்க முடிந்தது. ஒரு பட்டத்திற்குப் பிறகு டைப்பிஸ்டாகவும் வேலை கிடைத்தது. புது வாழ்க்கை தெரிந்தது. இவன் அப்போதுதான் பள்ளியிறுதி வகுப்பு முடித்தான். தம்பியை தன் உழைப்பால் மருத்துவக் கல்வி படிக்க வைத்துவிட வேண்டுமென்று கனவு கண்டாள், அவன் அக்கா.



பி.யு.சி. சேர்ந்தான். தம்பியை முதல் கட்ட மாக கல்லூரியில் சேர்த்து தானே பணம் கட்டி படிக்க வைப்பதில் அந்த அக்காவிற்குத்தான் என்ன மகிழ்ச்சி! தம்பி! தம்பி! என்று அவன் மேல், அடைத்திருந்த அன்பெல்லாம் இந்த சுதந்திர வாழ்க்கையில் அள்ளிப் பொழிந்தாள். இன்பமென்னும் வானிலே அந்த வானம்பாடி நெடுநாள் இன்னிசைபாடி பறக்க முடிய வில்லை. ஓர் நாள் காலத்தேவன் போயும் போயும் அவளைக் குறிவைத்து சுட்டுவிட்டான். தமிழ்ப் படத்தின் கதாநாயகி தேவையில்லாமல் கொல்லப்படுவதுபோல ஒரு சாதாரண காய்ச் சலில் போயேவிட்டாள்.

அவன் இப்போது குமுறிக்குமுறி அழுதான். ஆறுதல் சொல்வதற்காக அழைத்து வந்த நானே கலங்கிப் போயிருந்தேன். முதலில் என்னை தேற்றிக் கொண்டேன். அவன் இப்போது ஏங்குவதெல்லாம் தன் மேல் அன்பு செலுத்த ஒரு உயிர்கூட இல்லையே என்று தான். இறந்துவிட்ட அக்கா—அவனைப் படிக்க வைத்த அக்கா-மனிதனுக்கிய அக்கா இனி வரப்போவதில்லை. அவனுக்கு இப்போது இன்னொரு பற்றுக்கோல் தேவை. அந்தப் பற்றுக்கோலாக நான் ஏன் இருக்கக்கூடாது? என்னால் அது முடியுமா? அவன் தொடர்ந்து படிக்க பணம்? இடம்? உணவு? நான் எந்த முகத்தோடு அவனுக்கு ஆறுதல் சொல்வது? இருந்தாலும் துணிந்துவிட்டேன். நான்கூட இல்லாவிட்டால் வேறு யார் இவனுக்கு உதவ முன் வரப்போகிறார்கள்?

"தம்பி, ரவி! இனி நீ இங்கேயே இருக் கலாம். இந்த அறையிலேயே தங்கலாம். என்னுடன் சாப்பிடலாம் என்னை உனக்கு 'அக்காவின் பிரதிநிதி'யாகக் கடவுள் அனுப்பினார் என்று நினைத்துக்கொள். எல்லாப் பிரச்சனைகளையும் என்னிடம் விட்டுவிடு நான் கவனித்துக் கொள்ளுகிறேன்" - அவன் சிரிக்க வில்லை. முகம் மாறவில்லை. அழுவதை மட்டும் நிறுத்தினான். சிந்தித்தான். அவன் இதனை ஒப்புக்கொள்ள வேண்டுமென மிக விரும்பி னேன். அவனை இப்போது எனக்கு ரெம்பப் பிடித்தது. அவனுடன் இந்த அறையில் தங்கி வாழ, பேச, பழக, சாப்பிட, படிக்க மிக மிக ஆசையாக இருந்தது.

அவன் பதில் சொன்னான். "நீங்கள் உண்மையில் என் அக்காவின் பிரதிநிதிதான்" —வேறு எதுவும் சொல்லவில்லை. என் இதய பூமியில் கோடை மழை பெய்ததாக உணர்ந் தேன். மௌனமாக எல்லாவற்றிற்கும் சம்மதித் தான். அன்று இரவு இருவரும் அக்கா இறந்த துக்கத்தையும் மறந்து இரண்டு மணி வரை பேசிக் கொண்டிருந்தோம்.

மறுநாள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது. இருவரும் பஸ்ஸில் கல்லூரிக்குச் சென்றோம். இவ்வளவு நெருக்கமாக ஒருவனுடன் நான் பழகுவது இதுவே முதல் தடவை. என்ன இனிய அனுபவம்! 'நட்பு' என்ற சொல்லின் முழுப் பொருளையும் உணர்ந்து அனுபவித்தேன். வெளியூரிலிருந்த என் தந்தைக்கு 'டியூஷன்' எடுத்திருப்பதாகவும் மேற்கொண்டு நூறுரூபாய் அனுப்பும்படியும் வேண்டியிருந்தேன். பின் அதிகப்படியான செலவுகளைச் சமாளிக்க வழி?

அவனுக்குக் கல்லூரி மூன்றும் பருவக் கட்ட ணம் கட்ட வேண்டியதாயிற்று. தேவையோ மேற்கொண்டு நூற்றிருபது ரூபாய்; பலமுறை சிந்தித்தும் வழி தெரியவில்லை.

"எனக்காக நீ மிகவும் சிரமம் எடுத்துக் கொள்கிறாய் குமார்! எந்த ஜென்மத்தில் என் நன்றிக் கடனைத் தீர்க்கப்போகிறேனோ" என்றான்.

"சீரியசாக இருக்கும்போது நன்றி சொல் லவா நேரமிது" என்று சினந்தேன் அன்பாக.

அவனுக்குத் தெரியாமல் என் கைக்கடி காரத்தை அடகு வைத்தேன். 'எப்படிப் பணம் கிடைத்தது?' என்று அவன் கேட்கும்போது வகுப்பு நண்பன் ஒருவனிடம் பெற்றதாகப் பொய் சொன்னேன். அவனிடம் நான் சொல் லும் முதல் பொய் அதுதான். அதுவரை எங்க ளிடையே இரகசியங்களே இல்லை. அவன் உண்மையை உணர்ந்தபோது எப்படியெல் லாம் வருந்தினான். படிப்பை நிறுத்திவிடுவ தாக அடம்பிடித்தான். உடனே நானும் கூடவே நிறுத்திவிடுவதாக அச்சுறுத்தினேன். பிறகே வழிக்கு வந்தான்.

ஆண்டிறுதி விடுமுறையில் அவனைத் தற்கா லிகமாக என் அறையில் இருத்திவிட்டு சில நாட்கள் ஊருக்குச் சென்றேன். அந்தப் பிரி வைக்கூட என்னால் தாங்கமுடியவில்லை. நல்ல வேளை திடீரென்று என் தந்தை சென்னைக்கு மாற்றலாகிவிட்ட நிலையில் நானும் குடும்பத் துடன் விடுமுறை கழிவதற்குள்ளே சென் னையை அடைய முடிந்தது. ஆனால் மேற் கொண்டு நான் அறையில் தங்க முடியாதே! ரவியை என்ன செய்வது?

சிந்தனையுடன் என் பழைய அறையில் நுழைந்தேன். ''ஒரு மகிழ்ச்சியான செய்தி'' என்று ரவி என்னை வரவேற்றான். விடுமுறையில் ஒரு கம்பெனியில் அவனுக்கு வேலை கிடைத்திருக்கிறது. மாதம் நூற்றெண்பது ரூபாய் சம்பளம்!

''இன்றுதான் உனக்கு விவரமாகக் கடிதம் எழுதவேண்டுமென்றிருந்தேன். நீயே வந்துவிட்டாய். உனக்குச் சம்மதந்தானே?''

''படிப்பை நடுவில் நிறுத்தவேண்டிவருமே எனப் பார்க்கிறேன். மேற்கொண்டு.....''

''குமார் எனக்கு பி.யு.சி படிப்பு இருக்கிறது. மேற்கொண்டு தேவையானால் மாலை வகுப்பில் சேர்ந்துவிட்டால் போகிறது. நம் கடன்களையாவது தீர்க்க வேண்டாமா?''

நான் கடைசியில் சம்மதித்தேன். நாட்கள் நகர்ந்தன. இப்போது நாங்கள் நட்பின் முதிர்ச்சியை அடைந்துவிட்டோம் என நம்புகிறேன். ஓர் நாள் மாலை நான் கல்லூரியிலிருந்து திரும்பும் வேளையில் அவன் என் வீட்டிற்குப் பரபரப்பாக வந்து அந்தத் திடுக்கிடும் செய்தியைச் சொன்னான்.

''குமார். நான் என் வேலையை ராஜினாமா செய்துவிட்டேன்''

மலைத்து நின்றேன்.

''என்ன உளறுகிறாய். உனக்கு என்ன வந்தது?''

''என்னை டில்லிக்கு வேலை மாற்றம் செய்தார்கள். உடனே போகவேண்டும் அல்லது வேலையை விட வேண்டும். உன்னைப் பிரிந்து நான் எப்படித் தனியாக டில்லிக்குப் போக முடியும்? எனவே, உடனே ராஜினாமா எழுதிக் கொடுத்துவிட்டேன்.''

''மடையனே! உனக்கு ஒரு மில்லி கிராமாவது அறிவு இருக்கிறதா? நான் பக்கத்தில் இல்லாவிட்டால் என்ன? வாழ்நாள் முழுவதும் இப்படியே நாம் அருகிலேயே இருக்க முடியுமா? இப்போது யார் உனக்கு இன்னொரு வேலை தரக் காத்திருக்கிறார்கள்? நாளைக்கு என்ன செய்யப் போகிறாய் என்று யோசிக்காமல் முடிவு எடுத்துவிட்டாயே' எனச் சினந்தேன்.

''இல்லை. நான் மீண்டும் எந்த வேலையிலும் சேருவதாய் இல்லை. பிஸினஸ் செய்யப் போகிறேன்''

''ஆகா'' என்று உரக்கச் சிரித்தேன்.

''பிஸினஸ் என்ன கோலி விளையாட்டா?''

''இல்லேடா! நான் ரொம்ப நாளாகவே இந்த ஆசையை மனதில் வளர்த்து வருகிறேன். உனக்குத் தெரியும் நான் புத்தகங்களை, பத்திரிகைகளை எப்படி விரும்பிப் படிப்பவன் என்று. புத்தகக் கடை வைக்க வேண்டுமென ஓர் ஆசை'' தயங்கியபடி சொன்னான்.

''படிக்கவே புத்தகம் வாங்க முடியாத நிலையில் இருப்பவன் எப்படி புத்தகக்கடை வைக்கப் போகிறாய்? குறைந்தது, இரண்டாயிரம் ரூபாயாவது வேண்டும் மிஸ்டர், தெரியுமா?''

''நான் இந்த இரண்டாண்டுகளில் எண்ணூறு ரூபாய்வரை சேர்த்திருக்கிறேன். மேற்கொண்டு ஆயிரம் கடனாகப் பெற்றால் ஆரம்பித்துவிடலாம். இப்போதெல்லாம் புத்தகக் கடைக்கு நல்ல கிராக்கி தெரியுமா? விஷயம் தெரிந்தே சொல்கிறேன். பலரைக் கேட்டுச் சொல்கிறேன். போட்டதைச் சீக்கிரம் திரும்ப எடுக்கக் கூடிய பிஸினஸ் இது. மேற்கொண்டு பதிப்பகமும் ஆரம்பித்தால் நல்ல பணம் பார்க்கலாம்''

எனக்கும் ஏனோ அவன் சொன்னதில் நம்பிக்கை பிறந்தது. 'நம் நண்பன் ஓர் அழகிய புத்தகக்கடை வைத்திருக்கிறான்' என்ற எண்ணமே எனக்கு இனித்தது. புத்தகப் புழுவான எனக்கு ஒரு புத்தகக் கடையில் இருப்பதே நல்ல அனுபவம் தான். மேற்கொண்டு நல்ல நூல்களை வெளியிடப் பதிப்பகம் ஒன்று இருந்தால் எவ்வளவு பெருமை! ஆழ்ந்து யோசிக்காமல் இதை விரும்பி ''இருக்கட்டும். நல்ல யோசனையாகத்தான் இருக்கிறது. ஆனால் மேற்கொண்டு ஆயிரத்திற்கு என்ன செய்வது?'' என்றேன்.

''அதுதான் எனக்குத் தெரியவில்லை. உனது பணக்கார மாமா ஒருவர் இருக்கிறாரே அவரிடம் கடன் பெற முடியுமா? நாம் இரண்டுபேரும் சேர்ந்து ஆரம்பிப்பதாகவே இருக்கட்டும்''.

எனக்கு ஆசை வளர்ந்தது. அன்று இரவே என் மாமாவைச் சந்தித்தோம். ஏற்கெனவே ஒருமுறை ரவியை அவருக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறேன். விஷயத்தை விளக்கினேன். ஆனால் அதில் நான் இருப்பதாகக் காண்பித்துக்கொள்ளவில்லை. அவர் பணத்திற்கு நான் பொறுப்பேற்பதாகவும், ஒரு வருடத்தில் திருப்பித் தருவதாகவும் வாக்களித்தேன். புதிய தொழில் செய்பவர்களை உற்சாகப்படுத்தும் மனிதர் என் மாமா, நானே எதிர்பார்க்கவில்லை. இரவே பணம் தந்துவிட்டார்.

எல்லாம் கனவில் நடப்பதைப் போல இருந்தது. மூன்று மணி நேரத்தில் ஒரு திட்டம் செயலாகிவிட்டது.

அடுத்த பத்து நாட்களில் பிராட்வேயில் ஒரு கடை திறப்பதாக முடிவு செய்தான். நான் ஒரு வாரம் கல்லூரிக்கு லீவு போட்டுவிட்டு அவனுடன் அலைந்தேன். பல புத்தக நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டோம். பதிவு செய்துகொண்டோம். இவ்வளவு விரைவாக சென்னையில் எந்த நிறுவனமும் தொடங்கியிருக்கமுடியாது. பதிவு செய்யும்போது அலுவலகத்திற்கு நானும் போயிருந்தேன். நான் கையெழுத்திடவில்லை. நண்பர்கள் என்ற ஆத்மீக உறவு வரை ஆழம் இருக்கும்போது சட்டம் எதற்கு என்று நான் வாதிட்டேன். அவன் பெயரில் மட்டுமே பதிவானது.

சரியாகக் குறிப்பிட்ட தேதியில் கடையைத் திறந்தோம். எங்கள் இருவருக்கும் பிடித்த ஓர் இலக்கிய எழுத்தாளர் கடையைத் திறந்து வைத்தார்.

கனவு நனவானது. ரவி புதிய மனிதனானான். ''என்ன ஐயா! புத்தகக் கடைக்காரரே! நான் வரட்டுமா?'' என்று கிண்டலாக அவனிடம் விடைபெற்றேன். எனக்கு இறுதித் தேர்வுகள் நெருங்கிய நிலையில் நான் அடுத்த ஒரு மாதம் அவனைச் சந்திக்கவில்லை. தேர்வுகளுக்குப் பிறகு ஓர் நாள் கடைக்குச் சென்றேன். கடை ஓரளவு பரபரப்பாக இருப்பது கண்டு மகிழ்ந்தேன். ஒரு பையன் வேறு வேலைக்கு அமர்த்தியிருந்தான்.

''நம் பதிப்பக ஐடியா எப்படியிருக்கிறது?'' என்றேன்.

''நாளைக்குக்கூட ஆரம்பித்துவிடலாம். ஆனால் நல்ல எழுத்துக்கள் வருவதில்லையே. நீ ஏன் எழுதக்கூடாது? ஒரு நல்ல நாவல் எழுதிக்கொடேன். போட்டுவிடுவோம்'' என்றான்.

''நான் புதிதாக ஒரு நாவல் எழுதுவதைவிட, பத்திரிகையில் புகழுடன் வெளிவந்த ஒரு நாவலை வெளியிட்டால் நல்லதல்லவா? என்றேன்.

''உன் நாவலையே வெளியிட்டால் போகிறது' சமீபத்தில் உனது தொடர்கதை 'அன்பன். பத்திரிகையில் வெளியாகிப் புகழ்பெற்றதே அதை வெளியிட்டால் என்ன?''

நான் சம்மதித்தேன். ஒரேமாதத்தில் எங்கள் பதிப்பகத்தின் முதல் வெளியீடு வந்தது. பத்திரிகைகளில் வேறு விளம்பரம் கொடுத்திருந்தோம். முதலில் அடித்த ஐந்நூறு பிரதிகளும் ஒரே வாரத்தில் விற்பனையாயின. என்னால் நம்பமுடியவில்லை. நான் ஒரு பெரிய நாவலாசிரியன் அல்ல. 'மாணவ எழுத்தாளர்கள் அறிமுகம்' என்ற முறையில் எனது தொடர்கதை 'அன்பன்' இதழில் வெளியானதும், ஓரளவு பாராட்டுக்கள் பெற்றதும் உண்மைதான். ஆனால் கதைப்புத்தகமாகப் போட்டதில் இவ்வளவு பேர் படிக்க ஆர்வமாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கவில்லை விரைவில் இரண்டாம் பதிப்பும் வெளியிட்டோம். அதுவும் விற்பனையானது.

இந்த அமோக விற்பனையால் கிட்டத்தட்ட எனது மாமாவின் கடனில் பாதியை அடைத்து விட்டோம்.

எனது பட்டப்படிப்பு முடிந்து அடுத்த ஆண்டு நான் பட்ட மேற்படிப்பில் நுழைந்தேன். ரவியின் பொருளாதார நிலையும் ஓரளவு உயர்ந்தது. மீண்டும் அடுத்த வெளியீட்டிற்கு என்னை இன்னொரு நாவல் எழுதச் சொன்னான். இம்முறை நான் ஓர் இலட்சியப் படைப்பை அளிக்கக் கருதினேன். சமுதாயத்தின் ஊழல்களையே உணவாக்கி தான் உண்டு, ஊரைச் சுத்தமாக்கும் தியாகி ஒருவனின் கதையை எழுதினேன்! என்னை முழுவதும் ஈடுபடுத்திக்கொண்டு கதையைப் பத்து இரவுகளில் எழுதி முடித்தேன். தமிழகத்தில் சில நல்ல உள்ளங்களையாவது இந்த நாவல் உருவாக்கும் என்ற நம்பிக்கையுடன் எழுதினேன்.

இரண்டாம் வெளியீடும் உருவானது. நிறைய பாராட்டுக்கள் வந்தன. ஆனால் விற்பனை எதிர்பார்த்தது போல் இல்லை. நட்டமேற்படவில்லையானாலும், எதிர்பார்த்த விற்பனை இல்லை. அது எனக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்தது.

''என்ன ரவி! இலட்சியங்களுக்குத் தமிழ் நாட்டில் இந்த அளவுதானா மதிப்பு? எவ்வளவு பெரிய படைப்பாக இருக்கப் போகிறது என்றெல்லாம் கற்பனை செய்தேன் தெரியுமா?'' என்றேன்.

''குமார்! ஒன்றைப் புரிந்துகொள். இப்போது விற்பனைக்குத் தேவை கவர்ச்சி. இலட்சியமல்ல. முதலில் உன் கருத்துப்படி போட்ட மேலட்டை சரியில்லை. படங்களில் கவர்ச்சியில்லை. அடுத்து சற்று நெகிழ்வாக செக்ஸ் கலந்து ஒன்றை எழுது. விற்பனையைக் குவித்துவிடலாம்'' என்றான்.

''என்ன ரவி! விற்காவிட்டால் போகிறது. அந்த அளவுக்கு நம்மைத் தாழ்த்திக்கொள்ள வேண்டியதில்லை''

''என்னடா! உலகம் தெரியாதவனாய் இருக்கிறாயே! பதிப்பகம் ஓர் இலட்சியக்கூடமா என்ன? ஒரு வியாபாரம் தானே. வியாபாரத்தில் மேல்-கீழ் பார்க்கக் கூடாது. தற்போது எனக்குத் தேவை மூன்று. ஒன்று - பணம், இரண்டு - பணம், மூன்று - பணம்.''

பேசுவது ரவியா? நான் திடுக்கிட்டுப் போனேன். எவ்வளவு மாறிவிட்டான் புத்தகக் கடை ஆரம்பித்ததிலிருந்தே அவனுக்குப் பணம் சேர்க்கும் ஆசை ஏற்பட்டு இன்று இந்த அளவுக்கு பெருகியிருக்கிறது. இதை முதலிலேயே கவனிக்கத் தவறி திருத்தாதது என் குற்றம்தான்.

அடுத்த ஒரு வாரத்தில் ரவி என்னைச் சந்தித்து அவன் கருத்துப்படி ஆபாசமான, (அவன் மொழியில்—கவர்ச்சியான) ஒரு நாவலை எழுதித்தரும்படி கட்டாயப்படுத்தினான் நான் அதை வன்மையாக மறுத்தது மட்டுமன்றி, அவனுக்கு அறிவுரை சொல்லியும் அனுப்பி வைத்தேன்.

பிறகு படிப்புச் சுமையில் ஒரு மாதம் அவனை நான் சரியாகப் பார்த்துப் பேசமுடியாது போயிற்று இடையில் சில நாட்களாக எனக்கும் அவனுக்கும் எத்தனையோ புதிய பிரச்சினைகள்.

அடுத்த மாதத்தில் ஒரு நாள் கல்லூரிக்கு அருகே உள்ள ஒரு பெட்டிக் கடையில் செய்தித்தாள் வாங்கும்போது, அங்கு தொங்கிக் கொண்டிருந்த ஒரு புத்தகம் என் கண்களைக் கட்டி நிறுத்தியது. உற்றுப்பார்த்ததில் 'குமார்' என்ற என் பெயர் இருந்ததைக் கண்டு புத்தகத்தை எடுத்துப் பார்த்தேன். சந்தேகமேயில்லை. ரவியின் பதிப்பகத்தில் என் பெயரில் அந்தப் புத்தகம் வெளியாகியிருந்தது. முதல் பக்கத்தைக்கூட என்னால் படிக்க முடியவில்லை- அத்தனை ஆபாசம்; வெகுண்டெழுந்தேன், என் பெயரில், ரவி, நான் எழுதாத அந்தப் புத்தகத்தை வெளியிட்டிருக்கிறான்.

எரிமலையாய், அடுத்த நிமிடம் பதிப்பகத்தை அடைந்தேன். ரவி புன்சிரிப்புடன் என்னை வரவேற்றான். ''ஏன் இவ்வளவு கோபமாக இருக்கிறாய்?'' என்றபடி

''ரவி! சே......என்னால் பேசமுடியவில்லை இவ்வளவு கேவலமான முறையில் ஏன் நடந்து கொண்டாய்? என்னைக் கேட்காமல் இந்த புத்தகத்தை என் பெயரில் வெளியிட்டதில்கூட எனக்கு வருத்தமில்லை. ஆனால் எவ்வளவு கீழ்த்தரமான நாவல் இது. என் பெயரில் இது வெளியாகி எனக்கு என் ரசிகர்களிடையே எவ்வளவு பெரிய அவப்பெயரை பெற்றுத்தரவிருக்கிறது? என் பெயர் கெட்டால்கூடப் பரவாயில்லை. எத்தனை மனங்கள் இதனால் பாழாகப் போகின்றன, என்று கொஞ்சமாவது நினைத்துப் பார்த்தாயா?''

''என்ன மடத்தனமாக உளறுகிறாய். இந்த நாவல் எவ்வளவு பெரிய 'சக்ஸஸ்' தெரியுமா? உனது முந்திய நாவலை இது காம்பன்சேட் பண்ணிவிட்டது. வெளியான ஒரே வாரத்தில் கிட்டத்தட்ட அவ்வளவும் விற்பனையாகியிருக்கிறது. ஐந்நூறு ரூபாய் செககுடன் உன்னைத் திகைப்பில் ஆழ்த்த வேண்டுமென்பதற்காகவே இவ்வளவு நாள் உன்னிடம் சொல்லவில்லை. டேக் திஸ் ப்ளசென்ட் சர்பைரஸ்'' என்றபடி ஐந்நூறு ரூபாய்க்கான ஓர் செக்கை டிராயரிலிருந்து எடுத்து நீட்டினான். அதைக் கைநீட்டி வாங்கினேன். துகள் துகளாகக் கிழித்து அவன் முகத்திலேயே வீசினேன்.

எனக்குத் தேவை, பணமில்லை. மனிதத் தன்மை. என் பேனா முனை நகரும்போதெல்லாம் புதிய இலட்சியங்கள் பிறக்க வேண்டும். என் ஒவ்வொரு புது எழுத்தும் உருவாகும்போது ஒரு புதிய மனிதன் சமுதாயத்தின் புரையோடிப்போன புண்ணை ஆற்றப் புறப்பட வேண்டும் என்ற உணர்வுடன் மட்டுமே எழுதுபவன். மனிதத் தன்மையும், அற உணர்வும் இல்லாத இடத்தில் நான் இருப்பதில்லை. எத்தனையோ இலட்சியக் கனவுகளுடன் இந்தப் பதிப்பகம் தொடங்க சம்மதமளித்தேன். என் கனவுகளை நனவாக்க எதனையுமே நான் இழக்கத் தயாராகவும் இருக்கிறேன். ரவி நான் சொல்வது உனக்குப் புரிகிறதா?''

''புரிகிறது. உனது இலட்சியங்கள் பல நூற்றாண்டுகள் பின்தங்கியவை என்பதும் புரிகிறது. இன்றைய உலகில் முதல் தேவை பணம். அந்தப் பணத்திற்காக மட்டுமே நான் எதையும் இழக்க விரும்புகிறேன்.''

''என்னைக் கூடவா?''

''பணத்திற்குத் தடையாக இருக்கும் எதனையும்''—

நான் திகைத்து நின்றுவிட்டேன்.

“சரி பணத்திற்கு நான் தடையாக நிற்க வில்லை. என்னை நிரந்தரமாகவே இழந்துவிடு” என்று உடனே நான் வெளியேறினேன். அவன் என்னைத் தடுக்கவில்லை.

மனிதர்கள் எவ்வளவு சீக்கிரம் மாறிவிடுகிருர்கள். நான் குமுறிவந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். நட்பு என்னும் மாபெரும் கோபுரத்தில் நான் தூக்கி நிறுத்திய நண்பன் ரவி இன்று உயிரோடு இல்லை. பணம் தந்த உந்து வண்டியினுல் விபத்துக்குள்ளாகி இறந்த எனது கடந்த கால நண்பனுக்காக மனம் கசிந்து வாய்விட்டு அழுதேன்.

அவனை நான் முதலில் சந்தித்த சுடுகாட்டிற்கு என்னையுமறியாமல் என் கால்கள் அழைத்துச் சென்றன. அது தானே தத்துவங்கள் பிறக்குமிடம்; தத்துவங்கள் தளர்வதும் அங்கேதானே.

நட்பென்பது ஒரு சுடர். என் நட்பின் சுடரைப் பயன்படுத்திக்கொண்டு அவன் உலகத்தையெல்லாம் பார்த்தான். உலகத்தை அவன் கண்களுக்கு வெளிச்சமாக்கினேன். கடைசியில் ஆக்கம் அளிக்க வந்த சுடரால் என்னையும் அழித்தான். என் அழிவால் நண்பனுக்கு இன்னும் ஆக்கம் வருமானுல் நான் பலநூறு உடல் எடுத்து அவனுககாக அழியக் காத்திருக்கிறேன்.

எனது மணிபர்சில் அவனது புகைப்படம் ஒன்றே எஞ்சியிருந்தது. அதை எடுத்து தீக்குச்சியால் கொளுத்திப் பற்ற வைத்தேன். சுடுகாட்டின் அமைதியில் எனது அன்பிற்குரிய இறந்த உள்ளம் ஒன்று சுட்டுப்பொசுங்கி சாம்பலாகி என்னை விட்டுப் பிரிந்தது.

அந்த உள்ளம் இன்னொரு உடலைச் சாம்பலாக்கிவிட்டு இங்கு வந்த அந்த நாள் எனக்கு நினைவிற்கு வந்தது. அப்போது நான் அவனைத் தேற்றினேன். “செத்தாரைச் சாவார் சுமக்கும் உலகத்தில் சாவு ஒரு பெரிய வேதனையாக இருக்கவே முடியாது. அது தற்காலிகப் பிரிவுதானே”.

செத்த ‘உடலை’ப் பிரிந்தவனுக்கு அன்று ஆறுதல் சொன்னேன். ஆனுல் செத்த உள்ளத்தைப் பிரிந்து மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும் எனக்கு ஆறுதல் சொல்ல ஆளில்லாமல் தனியாக உட்கார்ந்து அழுதுகொண்டேயிருந்தேன்.

எனது கதையை மீண்டும் படித்துப் பார்த்தேன். எனக்கு முழு திருப்தி. மறுநாள் காலை நண்பர்களிடம் காட்டினேன் முத்துசாமி இதைப் படித்துவிட்டு, “நூறு ரூபாய் வரை பந்தயம் கட்டத்தயார். உனக்கு முதல் பரிசு கிடைத்தே ஆகவேண்டும். இதற்குப் பரிசு கிடைக்கவில்லையென்ருல் தமிழில் கதை படிப்பதையே நான் விட்டுவிடுகிறேன்” என்று உணர்ச்சி வசப்பட்டுவிட்டான்.

தாமோதரன் படித்துவிட்டு கண்ணில் நீர் துளிர்க்க “இதைப்போல ஒரு கதையை நான் படித்ததேயில்லை. உண்மையில் நடந்ததைப் போல அல்லவா எழுதியிருக்கிருய்?” என்று பாராட்டினுன்.

இந்தக்கதை என் வாழ்க்கையில் நடந்த உண்மை என்று அவர்களுக்கு எப்படித் தெரியும்?

மறுநாள் பதிவுத் தபாலில் கதையைப் பத்திரிகைக்கு அனுப்பினேன்.

நாட்கள் ஊர்ந்தன. கடைசியாக கதை முடிவுகள் வெளியாகும் அந்த நாளும் வந்தது.

காலையே நண்பர்கள் இருவரும் என் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். பத்திரிகை போடுபவன் ஏழு மணிக்கு பத்திரிகை போட்டான். முதலில் தாமோதரன் வாங்கிப் பார்த்துப் பக்கங்களைப் புரட்டினுன் “ஆ! வந்துவிட்டது! உன் கதைதான் முதல் பரிசு!” என்று துள்ளிக்குதித்தான்.

நான் அமைதியாக அதை வாங்கிப் பார்த்தேன். உண்மை! முதல் பரிசு “குமார்” எனப் போட்டிருந்தது. படித்தேன் தலை சுற்றியது. கதையின் தலைப்பு வேறு. இரண்டாவது பக்கத்தில் மினிஸ்கர்டுடன் ஒரு பெண் படியில் இறங்கி வரும் படம் என் கதையா? நிச்சயம் இருக்க முடியாது.

கீழே எழுதியவரைப் பற்றி—என்று குறிப்புக் கொடுத்திருந்தார்கள். அதில்—

“‘குமார்’ என்ற புனைப்பெயரில் எழுதும் ரவி தமிழகம் அறிந்த புகழ்பெற்ற நவீன எழுத்தாளர். எழுத்திலே, கருத்திலே, கொள்கையிலே, கவர்ச்சியைப் புகுத்திய புதிய சிந்தனையாளர். இளம் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட அவரின் இந்தக் கதையே முதல் பரிசு பெறுகிறது!”

நட்பு என்ற சுடர் என்னை அழித்த பிறகும் என் பெயரால் பயன்பெற்றதே என மகிழ்ந்தேன். ஏனெனில் கதைக்கு இரண்டாயிரம் ரூபாய் “பணம்” கிடைத்திருக்குமல்லவா?